# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 07.02.2023 | supeedsam.com | supeedsam@gmail.com










# தூக்கு போடுவதற்கு மாத்திரமே துண்டினை பயன்படுத்தும் நிலையில் பல கட்சிகள்

## விளாசிய சாணக்கியன் எம்.பி!



வடகிழக்கிலுள்ள கட்சிக்கான ஒரே நிற துண்டினை தொடர்ந்தும் கழுத்தினில் அணிந்து கொள்ளக்கூடிய கட்சி தமிழரசுக்கட்சி மாத்திரமே என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும்

02 ஆம் பக்கத்தில்...

# தமிழ் தேசிய கூட்டமைப்பினரே தமிழரசுக் கட்சியை அதிலிருந்து வெளியேற்றியிருந்தனர்

## சுமந்திரன் காட்டம்!

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையை குலைத்தவர்கள் தமிழரசுக் கட்சி இல்லை என்றும் ஆனால் தமிழ் மக்கள் மக்கள் மத்தியில் பொய்யான விடயம் பரப்பப்படுவதாக தமிழரசுக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும்

02 ஆம் பக்கத்தில்...



# தமிழர்களுக்கான மரணப் போதியே ‘13’

02 ஆம் பக்கத்தில்...

# சிங்கள பௌத்த பேரினவாதம் ஒருபோதும் ஈழத்தமிழர்களுக்கு தீர்வினை வழங்காது

சிங்கள பௌத்த பேரினவாதம் ஒருபோதும் ஈழத்தமிழர்களுக்கு தீர்வினை வழங்கமாட்டார்கள் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரெழுச்சி போராட்டம் இன்றைய தினம் முன்றாவது நாளாக முல்லைத்தீவில் அமைந்துள்ள, பண்டாரவன்னியன் சிலையிலிருந்து ஆரம்பமாகி பேரணியாக

02 ஆம் பக்கத்தில்...






# இந்தியா தமிழ் தேசிய கட்சிகளை பிரித்து செயற்படவில்லை

இந்தியா தமிழ் தேசிய கட்சிகளை பிரித்து செயற்படவில்லை என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கட்சிகள் ஒற்றுமையுடன்

02 ஆம் பக்கத்தில்...

# மாணவர்களின் மாபெரும் எழுச்சிப் பேரணியை தடுப்பதற்கு அரச புலனாய்வு துறையினர் முயற்சி?



வடக்கில் இருந்து கிழக்கை நோக்கி இடம் பெறும் மாபெரும் சுதந்திர தின எதிர்ப்பு பேரணியை முறியடிப்பதற்கு பாரிய சதித் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாக கிழக்கு பல்கலைகழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வாழைச்சேனை புகையிரத நிலையத்திற்கு முன்பாக சில முஸ்லிம் அமைப்புக்களை வைத்து குறித்த சதித்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுருப்பதாக தெரியவந்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...







# சமஸ்டிக்கு குறைவான தீர்வை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை!

## நாம் மட்டுமே ஜனநாயக கட்சி என்கிறார் சுமந்திரன்!

( வி.ரி. சகாதேவராஜா)

நாம் எந்த வேளையிலும் எமது இறுதி இலக்காகிய சமஸ்டி கோரிக்கைக்கு குறைவாக இறங்கிப் போகவில்லை. அதற்கு குறைவான தீர்வை ஒருபோதும் ஏற்கப் போவதுமில்லை .

இவ்வாறு காரைதீவில் ஊராட்சி மன்ற வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பேசிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஊடக பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ .சுமந்திரன் தெரிவித்தார் .

அவர் மேலும் கூறுகையில்..

முத்தமிழுக்கு பெயர் பெற்றது காரைதீவு மண். இங்கு தொடர்ச்சியாக இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆட்சி அமைத்து வந்திருக்கின்றது. இம்முறையும் அது ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

இன்று மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்கள் இருக்கின்றன. சந்தேகங்கள் உள்ளன. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றி நாம் திட்டவட்டமாக அன்றிலிருந்து கூறி வருகின்றோம்.

1956ல் இருந்து நமக்கான தீர்வு சமஸ்டி ஆட்சி என்பதை கூறி வந்திருக்கின்றோம். அதிலிருந்து நாம் எள்ளளவும் ஒரு போதும் இறங்கவில்லை . இறங்கப் போவதுமில்லை.

தமிழரசுக் கட்சியின் 75 வருடகால வரலாறு அனைவருக்கும் தெரியும்.

தமிழர் விடுதலை கூட்டணியாகட்டும் ,தமிழ் தேசியக் கூட்டமைப்பாகட்டும் அதில் பிரதானமான கட்சி தமிழரசுகட்சி என்பதை உலகறியும்.

இறுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பிலும் பிரதான தமிழரசுக் கட்சியோடு இரண்டு கட்சிகள் அல்ல இயக்கங்கள் பயணித்தன.

ஒற்றுமையின் காரணமாக அவர்களை நாங்கள் அரவணைத்து வந்திருந்தோம். இன்று அவர்கள் பிரிந்து போய் இருக்கின்றார்கள்.

ஆனால் நாம் தமிழரசுக் கட்சி பிரிந்துபோய் விட்டதாக பொய்யான விம்பம் ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். நாம் மட்டுமே ஜனநாயக கட்சி.

நாம் அவர்களுடன் இணக்கப்பாட்டிக்கு சென்றோம் .அவர்கள் எமது நிலைப்பாட்டினை ஏற்கவில்லை. பின்னர் அவர்கள் விதித்த நிலைப்பாட்டிற்கு நாம் இணங்கவில்லை.

எனினும், எந்த ஒரு கட்டத்திலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெயரை இருசாராரும் பயன்படுத்துவதில்லை என்று இணங்கினோம். ஆனால் அவர்கள் அதை மீறி இருக்கின்றார்கள். அவர்கள் தனித்து தேர்தல் கேட்பது அவர்களது ஜனநாயக உரிமை. அதில் யாரும் தலையிட முடியாது.

ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெயரை பாவிப்பது தவறு.

நாங்கள் அன்றும் இன்றும் ஒரே சின்னத்திலே அதாவது வீட்டுச் சின்னத்தில் தான் வருகின்றோம்.

எனவே மக்கள் எந்த விதமான குழப்பங்களுக்கும் ஆளாகத் தேவையில்லை.

ஒரே ஒரு ஜனநாயகக் கட்சியான எமது தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து எமது பலத்தை உலகத்துக்கு காட்ட வேண்டும் .

வடக்கு கிழக்கு தேர்தலில் எமது ஏகோபித்த வெற்றியைக் காட்டுகின்ற பொழுது தெற்கிற்கு அது ஒரு பாடமாக இருக்கும் .

தேர்தலின் பின்னர் தெற்கில் பாரிய அரசியல் குழப்பம் ஏற்படபோகின்றது. மக்கள் ஆணையை இழந்த அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி என்ற விடயம் அம்பலமாக போகிறது.

எமது அரசியல் விடுதலை போராட்டத்தில் எமது மக்களின் ஏகோபித்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை. அரசியலில் தெற்கில் குழப்பம் ஏற்பட்டாலும் வடக்கு கிழக்கில் குழப்பம் ஏற்படாது. மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் என்பதை தமிழரசுக்கட்சி வெற்றி பறைசாற்றும்.

அதனை இம்முறையும் வழமைபோல வடகிழக்கு மக்கள் உலகத்திற்கு காண்பிப்பார்கள். என்றார்.

# துருக்கி-சிரியா நில நடுக்கம் பலி எண்ணிக்கை உ,300 ஆக உயர்வு..!





துருக்கி- சிரியா எல்லையில் நேற்று அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. துருக்கி காசியான்டெப் மாகாணத்தில் உள்ள நூர்டகிக்கு கிழக்கே 23 கிலோமீட்டர் (14.2 மைல்) தொலைவில் 24.1 கிலோமீட்டர் (14.9 மைல்) ஆழத்தில் நிலநடுக்கம் தாக்கியது. மேலும் 100 ஆண்டுகளுக்கு பிறஜு இப்பகுதியைத் தாக்கிய சக்தி வாய்ந்த நிலநடுக்கம் இதுவாகும்.

ரிக்டர் அளவில் 7.8 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் துருக்கி, சிரியாவின் எல்லை நகரங்களில் கட்டிடங்கள் குலுங்கின. இந்த நிலநடுக்கம் இஸ்ரேல், லெபனான் போன்ற அண்டை நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது. கடுமையான நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் இடிந்து விழுந்தன.

அதிகாலை என்பதால் வீடுகளில் அனைவரும் உறங்கிக்கொண்டிருந்தபோது நிலநடுக்கம் ஏற்பட்டு கட்டிடங்கள் இடிந்து அதன் இடிபாடுகளுக்குள் பலர் சிக்கிக்கொண்டனர். இந்த நிலநடுக்கத்தில் சிக்கியவர்களை மீட்க துருக்கி - சிரியாவின் மீட்புக்குழுவினர் களமிறக்கப்பட்டு மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த நிலநடுக்கத்தால் இது வரை 2300க்கும் மேற்பட்டவர்கள் பேர் உயிரிழந்துள்ளனர். 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்து உள்ளனர்.

துருக்கியில் குறைந்தது 912 பேர்; சிரியாவின் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் குறைந்தது 350 க்கும் மேற்பட்டவர்கள் பலியாகி உள்ளனர். கட்டிடங்கள் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியுள்ளனர் அவர்களை மீட்கவும் மீட்புப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# மட்டக்களப்பில் பேரணியில் நாமும் கலந்து கோள்வோம் வாரீர்

(ரக்ஸனா)

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும்(N2E) பேரணியானது வடக்கு கிழக்கு பல்கலைகழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இந்த மாபெரும் போராட்டமானது செவ்வாய்கிழமை (07.02.2023) காலை 9 மணி அளவில் வெருகலை வந்தடைந்து அதன் பின்னர் கதிரவெளியில் மு.ப.10, மணிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து செல்வோர் இணைந்து கொள்வார்கள்.

அதன் பின்னர் செவ்வாய்கிழமை 11, மணிக்கு மட்டக்களப்பை நோக்கி பேரணி சென்று பிற்பகல் 03, மணிக்கு மட்டக்களப்பு காந்தி பூங்காவில் வந்தடையும்.

அதேவேளை அம்பாறை மாவட்டத்தில் இருந்து வருகைதரும் மற்றுமொரு பேரணி மு.ப. 11 மணியளவில் பெரியகல்லாற்றை தாண்டி பி.ப. 1.30, மணிக்கு களுதாவளையில் பிள்ளையார் கோயில் சந்தியில் மேலும் பலர் இணைந்து கொண்டு அங்கிருந்து பி.ப 03, மணிக்கு மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தை வந்தடைந்து அங்கு பேரணி தொடர்பான பிரகடணம் வாசிக்கப்பட்ட பின்னர் இந்த கவன ஈர்ப்பு போராட்டம் நிறைவு பெறும் என அதன் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தப்பேரணியில் தமிழ்தேசிய உணர்வாளர்கள், தமிழ்தேசிய அரசியல் கட்சி சார்ந்தவர்கள், இலங்கை தமிழரசுகட்சி சார்ந்தவர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், மகளீர் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், மதத்தலைவர்கள், என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கையின் 75, வது சுதந்திரதினம் தமிழர்களின் கரிநாள் துக்கநாள் என்பதால் வடக்குகிழக்கை ஒன்றினைத்து இந்த பேரணி கடந்த (04.02.2023) சுதந்திர தினத்தன்று யாழில் ஆரம்பித்து எழுச்சியுடன் இந்த பேரணி நாளை மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் நிறைவுறும் இந்த நிகழ்வில் தமிழர் என்ற உணர்வுடன் எல்லோரும் கலந்து கொள்வோம். ஏன மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## தமிழர்களுக்கான மரணப் பொதியே ‘13’

இந்தியா தனது நலனுக்காக இலங்கையுடன் சேர்ந்து தமிழ் மக்கள் மீது திணித்த கூட்டுச்சதியே 13ஆவது திருத்தச்சட்டம் என்றும் இது தமிழர்களுக்கு சவக்குழி, மரண பொதி என்றும் தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்லவராசா கஜேந்திரன் இதை நாம் முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசமும் இறைமையும் சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வு எட்டப்படும் வரை தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த மக்களுடன் தொடந்து குரல் கொடுக்கும். தென்தமிழீழ மண்ணில் நின்று கொண்டு இந்த மக்கள் செய்யும் பிரகடனம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெப்ரவரி 4 கரிநாள் ஒற்றையாட்சியையும் 13ஆவது திருத்தத்தை ஒழுப்போம் என்ற தொனிப் பொருளில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டு நகரில் சனிக்கிழமை (04) நடத்திய ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், இலங்கைத் தீவில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் இந்தியாவினுடைய நலன்கள் மற்றும் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் பூலோக நலன்களை பேனுவதற்கு 198% இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்ற பெயரிலே இந்தியாவும் இலங்கையும் கூட்டுசதி செய்து 13ஆ திருத்த சட்டத்தை உருவாகினர்.

அதன் மூலம் மாகாணசபை கொண்டுவரப்பட்டு, அதன் அதிகாரம் முழுவதும் ஜனாதிபதியிடம் இருக்கின்றது. அவரால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடம் இருக்கின்றது மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருக்கோ அமைச்சர்களுக்கோ எந்த அதிகாரமும் இல்லை.

மாகாணசபைக்கும் எந்த அதிகாரமும் இல்லை என்பதுடன் காணி பொலிஸ் அதிகாரம் கிடையாது என்பதுடன் ஜனாதிபதிக்கு முழு அதிகாரமும் என உயர் நீதிமன்றம் 30 தீர்ப்புக்களில் தெரிவித்துள்ளது.

2016 ஜனவரி மாதத்தில் இருந்து 2018 டிசெம்பர் மாத்துக்குள் ரணில் மைத்திரி நல்லாட்சி கலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இனப்பிரச்சனைக்கு தீர்வு என்ற பெயரிலே ஒரு அரசியல் அமைப்பு வரைவை உருவாக்கினர்.

அந்த அரசியல் அமைப்பில் இரா.சம்பந்தன் பௌத்த மதம் முதன்மை மதம் என எழுத்துமூலமாக கையொப்பம் வைத்துள்ளார். இது தமிழர்களுக்கு செய்யப்பட்ட மிகப் பெரும் துரோகம்.

அதேபோல, வடக்கு, கிழக்கு இணைப்பை கைவிடுவதற்கும் சமஷ்டியை கைவிடுவதற்கு இணங்கியுள்ளதுடன் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை எங்கள் மீது திணிக்கின்ற ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை கொண்டுவருவதற்கு இனங்கியுள்ளனர். அதை நாங்கள் இன்று நிராகரிக்கும் வகையில் இந்த பேரணியை செய்துள்ளோம்.

13ஆவது திருத்த சட்டத்தை தீர்வாக வலியுறுத்தி தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் விக்கினேஸ்வரன் அணியினர் நிற்கின்றனர். ஏனையவர்கள் அரசாங்கத்துடன் நின்று கொண்டு ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இன்று அவர்களும் சுதந்திர தின கரிநாள் என்ற பேர்வையில் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். ஏனென்றால் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து ஒற்றையாட்சிக்குள் 13 ஏற்றுக் கொண்டு தயாராகிவிட்டனர்.

மக்கள் தங்களை இனங்கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காக ரணிலுக்கு எதிரி போல் நாடகமாடிக் கொண்டுள்ளனர். இதனை மக்கள் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும்.

நான் இனப்பிரச்சனையை ஓராண்டில் தீர்க்கப் போவதாகவும் தமிழ் தலைவர்கள் ஒத்துழைக்குமாறும் கடந்த நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஓர் அழைப்பு விடுத்தார்.

இதன்போது ரணிலுக்கு பதிலளித்த எம்.ஏ. சுமந்திரன், இனப்பிரச்சனை தீர்வுக்கு எடுக்கின்ற முயற்சியை வரவேற்பதாகவும் 2016 நல்லாட்சி காலத்தில் வரையப்பட்ட அரசியல் அமைப்பின் அடிப்படையில் தீர்வுகான முற்பட்டால் ஓராண்டு தேவையில்லை 3 மாத்தில் தீர்வு வந்துவிடும் என்றார்.

இந்தியா தனது பிராந்திய நலன்களை பேணுவதற்காக தமிழர்களை 13 ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்து தமிழர்களை அழிக்கின்ற நடவடிக்கைக்கு தொடர்ந்தும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றது.

தமிழர்களிடம் வாக்குகளை பெற்று கொண்டு பிரதிநிதிகள் என்று சொல்லுகின்றவர்கள் இந்தியாவிடம் சலுகைகளை பெற்றுக் கொண்டு 13ஐ நடைமுறைப்படுத்தல் என்ற பேர்வையிலே ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கின்றனர்

இதனை மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் பல்கலைக்கழக மாணவர்கள் இதற்கு பலியாககூடாது விழிப்படைய வேண்டும் என்பதுடன் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவொரு தீர்வையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

## மாணவர்களின் மாபெரும் எழுச்சிப் பேரணியை..

புலனாய்வுத்துறை உறுப்பினர் ஒருவரை வைத்து இந்த சதித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் கூறுகிறார்கள்.

பேரணியில் வருகின்றவர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டங்கள் மேட்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளார்கள்.

வடக்கு கிழக்கு பேரணியை தடுக்கும் வகையிலேயே குறித்த சதித்திட்டம் ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று வந்தாறுமூலையில் உள்ள கிழக்கு பல்கலைக்கழக சிங்கள மாணவர்கள் மற்றும் அங்குள்ள ஒருசில தமிழ் மாணவர்களை வைத்தும் இந்த பேரணியை முறியடிக்க முயற்சிப்பதாகவும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மூன்று நாட்கள் நிறைவடைந்த நிலையில் இன்று நான்காவது நாளாக மட்டக்களப்பு காந்தி பூங்காவில் மாபெரும் மக்கள் எழுச்சியோடு நிறைவடையவுள்ள வடக்கு கிழக்கு மக்கள் எழுச்சி பேரணியை கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் முறியடிப்பதாக போலியான தோற்றப்பாட்டை உருவாக்கவே குறித்த சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள், மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை நிறைவு நிகழ்வு நடாத்துவதற்கு விளையாட்டரங்கு ஒன்றை தெரிவு செய்து ஏற்பாட்டாளர்கள் மட்டு மாநகரசபையில் அனுமதி கோரிய போதும் அந்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மாநகர முதல்வர் வெளிநாடு சென்றுள்ள நிலையில் பிரதி முதல்வருக்கு உத்தியோக பூர்வமாக பொறுப்பை ஒப்படைக்காததால் பிரதிமுதல்வர் குறித்த விடயத்தில் கைவிரித்துள்ளதாக தெரியவருகிறது.

## சிங்கள பௌத்த பேரினவாதம் ஒருபோதும்

முல்லைத்தீவு அலம்பல் சந்தியினை சென்றடைந்து குருந்தூர் மலை ஆக்கிரமிப்பினை எதிர்த்தும் தொடர்சியாக அலம்பில் துயிலுமில்லத்திலும் நினைவேந்தலை மேற்கொண்டு பேரணியாக நீராவியடியை சென்றடைந்தது.

இதன் பின்னர் அங்கு ஊடகங்களுக்கு கருத்து எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு பொதுசன வாக்கெடுப்பே இறுதி தீர்வு என்றும் சுதந்திரமா அல்லது மாகாண சபை முறைமையா என்பதை புலம்பெயர் தமிழர்களும் வாக்களிக்ககூடிய வகையில் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென சர்வதேசத்திடம் கோரிநிற்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்தியா தமிழ் தேசிய கட்சிகளை பிரித்து செயற்படவில்லை

இருப்பதையே இந்தியா விரும்புகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெயசங்கர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

அவர் இலங்கை அரசியலில் நீண்டகால அனுபவம் பெற்றவர் எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அவர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை ஒருமித்தே சந்தித்திருந்தார் எனவும் மாவை குறிப்பிட்டுள்ளார். தமிழ் தேசிய கட்சிகள் இலங்கையிலும் சர்வதேசத்திலும் சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பில் அரசியல் தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்று ஒருமித்து கோரிக்கை முன்வைத்துவரும் நிலையில் தான் ஜெய்சங்கரும் அக்கட்சிகளின் தலைவர்களை ஒருமித்து சந்தித்துள்ளார்.

அதிகாரங்கள் பகிரப்பட்டு, அவை மீள எடுக்கப்படாத வகையில், இந்தியாவிலுள்ள அரசியல் அமைப்பை போன்று இலங்கையிலும் உருவாக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் தேசிய கட்சிகளின் கோரிக்கையாக இருந்துள்ளது.

அவ்வாறான பின்னணியில் இந்தியா பிரித்து செயற்படுகின்றது என்று கூறுவது பொருத்தமற்ற ஒன்றாகும். அபத்தமானது எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

## தமிழ் தேசிய கூட்டமைப்பினரே தமிழரசுக்

நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை ஆலையடிவேம்பு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் எவ்வாறு போட்டியிடவேண்டுமென சில சிபாரிசுகளை செய்ததாகவும் ஆனால் அவை சிலருக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அவர்கள் கூறியபடி தேர்தலை எதிர்கொள்ள தயாரானபோது அதனையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டடைப்பிலுள்ள பங்காளி கட்சிகளே தம்மை வெளியேறச் சொன்னதாக சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்

## தூக்கு போடுவதற்கு மாத்திரமே துண்டினை...

நிகழ்வு நேற்று முன்தினம் மாலை ஆலையடிவேம்பு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஏனைய கட்சிகள் தமது கட்சிகள், துண்டினை தூக்கு போடுவதற்கு மாத்திரமே பயன்படுத்தும் நிலையில் உள்ளதாக அவர் விமர்சனம் செய்துள்ளார்.

தமிழ்மக்களின் அரசுக்கான கட்சியும் தமிழரசுக் கட்சியே எனவும் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் கட்சியும் அதுவே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த தேர்தலில் கப்பல் ஒன்றை வாடகைக்கு ஒருவர் எடுத்து வந்து மக்களை ஏமாற்றினார். அவர் நேற்று மட்டக்களப்பிற்கு அதனை வாடகைக்காக பெற்று வந்துள்ளார்.

அம்பாறையில் நடந்தது ஒருபோதும் மட்டக்களப்பில் நடைபெறாது என்றார்.

இதேநேரம் இம்முறை கப்பலுக்கு பதிலாக படகை ஒருவர் எடுத்து வந்துள்ளதாக குறிப்பிட்டார். எவர் வந்தாலும் தமிழ் மக்களின் நிரந்தர கட்சியின் சின்னம் வீடுதான் என்றும் இரா.சாணக்கியன் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒருவரையொருவர் குறைகூறும் பிரசாரத்தை நிறுத்தவேண்டும்!

## கட்சிகளை மேலும் பிரிக்காமல் தமிழ் தேசியத்தின் அடிப்படையில் ஒன்று சேருங்கள்!

### காரைதீவில் மாவை சேனாதிராஜா அறைகூவல்

( வி.ரி. சகாதேவராஜா)

தமிழ் தேசிய பரப்பில் ஒருவரையொருவர் குறைகூறி வசைபாடும் பிரசாரத்தை நிறுத்த வேண்டும். தமிழ் தேசியத்தின் அடிப்படையில் ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து செயல்படவேண்டும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா காரைதீவில் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச சபைக்கான தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நேற்று முன்தினம் (5) ஞாயிற்றுக்கிழமை மாலை விபுலானந்த கலாச்சார மண்டபத்தில் காரைதீவு கிளைச் செயலாளர் க.செல்வப்பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சியின் ஊடக பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் கட்சியின் பொருளாளர் கனகசபாபதி அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் கலந்து கொண்டார்கள். முன்னதாக இலங்கை தமிழர் கட்சி சார்பில் காரைதீவில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

அங்கு மாவை சேனாதிராஜா மேலும் உரையாற்றுகையில்...






தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற கட்டமைப்பின் கீழ் தமிழரசுக் கட்சி சின்னத்தின் கீழ் அனைவரும் செயல்பட்டதால் கடந்த அனைத்து தேர்தல்களிலும் நாங்கள் வெற்றிவாகை சூடி வந்தோம். இம் முறை தமிழரசுக் கட்சி அதே சின்னத்தில் தேர்தலில் களமிறங்கி உள்ளது. நாங்கள் மேலும் மேலும் வசைபாடி கட்சிகளை பிரிக்காமல் ஒற்றுமையாக செயல்பட வேண்டும்.

ஊராட்சி சபைகளில் நாம் ஆட்சி அமைக்கின்ற பொழுது எமது தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சிகளை மாத்திரம் அல்ல சுயேச்சை அணிகளை மாத்திரமல்ல தேவையேற்படின் அரசகட்சி என்றாலும் அவர்களை அரவணைத்து நாங்கள் நட்புரிமையோடு இணைந்து செயல்பட வேண்டும் .

அவர்களை வேறுபடுத்தி எதிரியாக பார்க்க கூடாது. இம்முறை தேர்தல் பலத்த சவாலாக அமையப் போகின்றது.

எனவே நாம் தமிழ் தேசியத்தின் அடிப்படையில் ஒன்று இணைந்து தேர்தலில் நின்று அறிவையும் தொழில்நுட்பத்தையும் இணைத்து ஆட்சி அமைக்க வேண்டும். யாரையும் பிரித்து பார்த்தல் கூடாது.

எமது கட்சியில் இம்முறை இளைஞர்கள் பெண்கள் புதியவர்கள் என பல சாராரும் தேர்தலில் நிற்கின்றார்கள். இங்கு கூட இருவரைத் தவிர ஏனையோர் இளைஞர்களாகவும் புதியவர்களாகவும் இருக்கின்றீர்கள்.

இதனை வரவேற்கின்றோம்.

மேலும் இப்படிப்பட்டவர்கள் வர வேண்டும். நிர்வாகத்தில் பங்கேற்க வேண்டும். எமது ஒட்டுமொத்த சமஸ்டிக் கட்டமைப்பிலே அடிப்படையானது ஊராட்சி மன்றம் . இந்த ஊராட்சி மன்றத்தில் இருப்பவர்கள் ஊடாக எமது தேசியத்தை கட்டி எழுப்ப வேண்டும். முழுமையாக வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வுடனான மீளப் பெற முடியாத சமஸ்டியை நாங்கள் எதிர்பார்த்து நிற்கின்றோம். அதற்கான அடித்தளமே ஊராட்சி மன்றமாகும். இன்றைய பொருளாதார நெருக்கடியில் இலங்கை அரசாங்கம் எமது பிரதேச புலம் பெயர் தமிழ்மக்களது உதவியை நாடி நிற்கிறது.

நாம் இந்த ஊராட்சி சபைகள் ஊடாக அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்தவேண்டும். அவர்களது உதவியை பெற வேண்டும் .

நாட்டின் போர் சூழலாலும் இன்னும் பல்வேறு காரணங்களாலும் சுமார் 12 லட்சம் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். பொருளாதார நெருக்கடி மிகுந்த இன்றைய காலகட்டத்தில் அரசாங்கம் அவர்களது உதவியை நாடி நிற்கின்றது .வடக்கு கிழக்கில் அதிகாரத்தை பகிர்ந்து சமஸ்டிக்கான அடித்தளத்தை இடுகின்ற பொழுது அவர்களது உதவி நாட்டுக்கு கிடைக்கும். அதனிடையே ஊராட்சி மன்றத்துக்கான உதவிகளை நாங்கள் ஒற்றுமைப்பட்டால் அவர்களிடமிருந்து பெற்று எமது மக்களுக்கு சேவை செய்யலாம். மக்களையும் சிறந்த வாழ்க்கைக்கு மாற்ற வேண்டும் .

எனவே இலங்கை தமிழரசி கட்சியை வழமைபோல இம்முறையும் வெற்றியடையச் செய்ய நீங்கள் அனைவரும் கைகோர்க்க வேண்டும். என்றார்.

# திருமலையில் பசி தீர்க்கும் மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்வு





(அ . அச்சுதன்)

சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் வறிய மக்களின் பசி தீர்க்கும் மாபெரும் சக்திப்பொங்கல் நிகழ்வு நேற்றையதினம் (05) இடம்பெற்றது.

இந்நிகழ்வு, அன்புவழிபுரம் ஞான வைரவர் ஆலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வு, அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்அன்னதானமானது, இலண்டன் ஓம்சக்தி அம்மா காப்பகத்தின் நிதி அனுசரணையில் அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷின் நேரடி கண்காணிப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நானாட்டான் பிரதேசத்தில் மேய்ச்சல் நிலம் இன்மையால் விவசாயிகள் பாதிப்பு





( வாஸ் கூஞ்ஞ)

நீண்டகாலமாக மன்னார் மாவட்டத்தில் சரியான முறையில் கால்நடை வளர்ப்போருக்கு மேய்ச்சல் நிலம் அடையாளப்படுத்தி கொடுக்காமையால் விவசாய நெற்செய்கை காலத்தில் கால்நடைகளை தகுந்த இடங்களுக்கு கொண்டுசெல்லாமையால் விவசாயம் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சனிக்கிழமை (04) மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேசப் பகுதியில் அறுவடை நிகழ்வு இடம் பெற்றது..

இவ் நிகழ்வின்போது அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கையில்;

விவசாயச் செய்கையை முன்கூட்டியே செய்த விவசாயப் பயிர்கள் கால்நடைகளால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தார்கள்.

குறிப்பாக நானாட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல கிராமங்களிலும் முருங்கன் குளத்தின் கீழ் உள்ள ஒலுமடு பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

முன்கூட்டியே வெள்ளாமை செய்ததில் தண்ணீர்ப் பற்றாக்குறை , நீரினால் ஏற்படக்கூடிய அழிவு , பசளைப்பாவனை குறைப்பு , போன்ற நிலைகள் காணப்பட்டாலும் கால்நடையால் ஏற்பட்ட அழிவு நீர் முகாமைத்துவத்தின் ஒழுங்கீனம் போன்றவை பாதகத்தன்மையாக காணப்படுவதால் நானாட்டான் பகுதி விவசாயிகள் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதாக கவலை தெரிவித்தார்கள்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற 75 வது தேசிய சுதந்திர தின நிகழ்வு!!









(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் %5வது தேசிய சுதந்திர தின நிகழ்வு மட்டகளப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இன்று (04) வெபர் மைதானத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது அதிதிகள் வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து மாவட்ட செயலாளரினால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் தேசிய கீதம் இசைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் பாண்டு வாத்திய இசை முழங்க, இலங்கை இராணுவத்தின் கடெற் படை மற்றும் சாரணிய மாணவர்களின் அணி வகுப்பு மரியாதையுடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷினி ஸ்ரீகாந்த் அவர்களின் வரவேற்புரையும் அதனைத் தொடர்ந்து அரசாங்க அதிபரினால் 75வது சுதந்திர தின உரையும் நிகழ்த்தப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்களினால் பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளில் இடம்பெற்று வரும் வீட்டுத்தோட்டம், மரநடுகை மற்றும் சிரமமான திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் அதிதிகளினால் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சமயத் தலைவர்கள், 231வது இராணுவ படைப்பிரிவின் பிரிகேட் கொமாண்டர் திலுப பண்டார உள்ளிட்ட முப்படைகளின் உயர் அதிகாரிகள், பொலிஸ் திணைக்களத்தின் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், மாவட்ட செயலக உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் நிறைவில் கோட்டைப் பூங்காவை அண்மித்த பகுதியில் மர நடுகை இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அச்சுறுத்தல்களுக்கும் நாம் ஒருபோதும் அஞ்சியது கிடையாது

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இரத்தினபுரி ஹெரமிட்டிகல தோட்டத்திற்கு நேற்று முன்தினம் (5) தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்கு செல்வதற்கு ஒரு சில மணிநேரங்களுக்கு முன்பதாக குறித்த தோட்டத்திற்கு அண்மையில் உள்ள கிராமத்தை சேர்ந்த மாற்றுக் கட்சி நிர்வாகிகள் எமது பிரசார நடவடிக்கைகளை தடுப்பதற்காக பாதையை உடைத்து வாகனம் செல்ல தடைசெய்ததாகவும் அதனை முறியடித்து வெற்றிகரமாக மக்கள் சந்திப்பை நடத்தியதாகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.



இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இ.தொ.கா, எம் மக்களை சந்திப்பதற்கு எந்தவித தடைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் நாம் ஒருபோதும் அஞ்சியது கிடையாது.

எமது பிரசாரத்தை தடுக்க எடுத்த முயற்சிகளை தோற்கடித்து மறுபக்கத்தில் இருந்து முச்சக்கரவண்டியொன்றை வரவழைத்து மக்களை சென்று சந்தித்ததுடன் கடந்த காலத்தைவிட எதிர்காலத்தில் அதிகமான சேவைகளை இ.தொ.கா முன்னெடுக்குமென மக்களிடம் தெரிவித்தோம் எனவும் இதொகா கூறியுள்ளது.

# உள்ளூராட்சி மன்றத்தேர்தல் 2023

## மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) இலங்கை தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள்

























கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்கள்

# 2023ல் வட, கிழக்கில் அமையப் போகின்ற உள்ளூராட்சி அரசுகள் தமிழரசாகவே இருக்க வேண்டும்

(சுமன்)

கடந்த காலத்தில் எமது மக்களால் மேற்கொள்ளப்பட்ட கசப்பான சம்பவங்களினால் ஏற்பட்ட விளைவுகளைப் பாடமாக வைத்துக் கொண்டு இந்த உள்ளூராட்சி சபைகளைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றக் கூடிய வகையிலே மக்கள் செயற்பட வேண்டும். 2023ல் வடக்கு கிழக்கில் அமையப் போகின்ற உள்ளூராட்சி அரசுகள் தமிழரசாகவே இருக்க வேண்டும் எனதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.



ஆலையடிவேம்பில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய அரசியற் பயணத்திலே உள்ளூராட்சி மன்றங்கள் மிக முக்கியமானதாகவே இருக்கின்றது. ஒரு கட்டமைப்பிற்கு அத்திவாரம் எவ்வாறு பலமாக அமைக்க வேண்டுமோ அதே போன்றே ஒரு அரசியற் கட்சி தன்னைப் பலப்படுத்துவதற்கு இந்த உள்ளூராட்சி மன்றங்களை பலமாக அமைக்க வேண்டும். அந்த அடிப்படையிலேயே நாங்கள் எமது உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களை எமது மக்களின் விருப்பிற்கு ஏற்றால் போல் தெரிவு செய்திருக்கின்றோம்.

இந்த அம்பாறை மாவட்டத்திலே 0% உள்ளூராட்சி மன்றங்களிலே 42 வட்டாரங்களில் நாங்கள் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். இந்த வட்டாரங்களிலே எமது கட்சி அதிகப்படியான பெரும்பான்மையைப் பெறுவதற்காக எமது வேட்பாளர்களும் எமது மக்களும் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

கடந்த காலத்திலே சில குறைபாடுகள் காரணமாக ஆலையடிவேம்பு பரதேசசபையிலே எமது ஆட்சி அதிகாரங்களைச் செலுத்த முடியாத நிலை காணப்பட்டது. இருந்தும் இந்தப் பிரதேசம் தொடர்பில் நாங்கள் எமது அரசியல் ரீதியான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். இந்தப் பிரதேசங்களில் இடம்பெறுகின்ற எமது மக்களின் எதிர்காலத்தைச் சிதைக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக எமது துணிகரமான செயற்பாடுகள் இருந்திருக்கின்றன என்பதை நாங்கள் துணிவாகச் சொல்ல முடியும். அந்த அடிப்படையில் எதிர்வரும் 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள பத்து வட்டாரங்களிலும் எமது கட்சியின் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டியது எமது மக்களின் தலையாய கடமையாகும்.

தமிழர்கள் அதியுச்ச அதகாரங்களை பயன்படுத்தக் கூடிய களங்களாக இந்த உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அந்த உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு எமது மக்கள் கைகளிலேயே இருக்கின்றது. எமது மக்கள் தொடர்பில் அன்றாடம் இடம்பெறுகின்ற சில பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுத் தரக் கூடிய ஒரு இடமாக இந்த உள்ளூராட்சி மன்றங்களே இருக்கின்றன. அந்த அடிப்படையிலே அவ்;வாறான பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து எமது மக்களுக்குச் சேவையாற்றக் கூடியவர்களை எமது மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

எமது மக்களுடன் என்றுமே பயணிக்கின்றவர்களாக நாங்க் இருக்கின்றோம். மக்களுக்கான எமது தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களின் கைகளிலே இருக்கின்றது. கடந்த காலங்களில் பல கசப்பான சம்பவங்கள் எமது மக்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றினால் ஏற்பட்டுள்ள விளைவுகளை ஒரு பாடமாக வைத்துக் கொண்டு இந்த உள்ளூராட்சி சபைகளைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றக் கூடிய வகையிலே மக்கள் செயற்பட வேண்டும். இந்;த 2023ம் ஆண்டு அமையப் போகின்ற இந்த உள்ளூராட்சி மன்றங்களின் அரசுகள் தமிழரசாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## தமிழரசுக்கட்சியின் முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டம் ஆலையடிவேம்பில்





(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டம் நேற்று முன்தினம் (5) ஞாயிற்றுக்கிழமை ஆலையடிவேம்பில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் ஆலையடிவேம்பு கலாச்சார மண்டபத்தில் வேட்பாளர்கள் அறிமுகம் நடைபெற்றது.

அங்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கட்சியின் ஊடக பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் கட்சியின் பொருளாளர் கனகசபாபதி அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக இலங்கை தமிழர் கட்சி சார்பில் ஆலையடிவேம்பில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

## நானுஓயா கிளாசோ தோட்டத்தில் சிரமதானம்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

நாட்டின் 75வது சுதந்திர தினத்தினை முன்னிட்டு நானுஓயா கிளாசோ தோட்டத்தில் வீதி சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. பாரதி நற்பணி மன்றத்தின் ஒழுங்கமைப்பில் உறுப்பினர் கவிஷன் தலைமையில் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.

நீண்ட காலமாக வீதி மோசமான நிலையில் இருந்ததை அவதானித்த பாரதி நற்பணி மன்றத்தின் உறுப்பினர்கள் பிரதான வீதியின் இரு மறுங்கிலும் இருந்தும் குப்பைகள் அகற்றப்பட்டு வீதிகள் சுத்தம் செய்யப்பட்டதோடு , வீதியின் இரண்டு பக்கமும் காணப்பட்ட பற்றைக்காடுகளை அகற்றி விபத்துக்கள் நடைபெறாமல் இருப்பதற்காகவும் கிராமத்தினூடாக செல்லும் வீதியை அழகாக வைத்திருக்கவும் இந்த சிரமதானப் பணி நடைபெறுவதாக குறிப்பிட்டனர் .

இதன் போது பொது மக்களுக்கான சுகாதார விழிப்புணர்வு கருத்துரைகளும் வழங்கப்பட்டன. இந்த சிரமதான நிகழ்வில் கிராம மட்ட அமைப்புகள் இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கிளிவெட்டியில் முன்பள்ளி ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்



(அ . அச்சுதன்)

கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தினால் மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுடனான வருடாந்த செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்

கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் திருகோணமலை மாவட்ட கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவருமான சுந்தரமூர்த்தி தீபராஜ் அவர்களின் தலைமையில் கிராமிய கல்வி நிறுவனத்தின் சுவிஸ் நாட்டின் செயற்பாடாளர் சுப்பிரமணியம் ஸ்ரீதரன் அவர்களின் பங்குபற்றலுடனும் கிராமிய கல்வி நிறுவனத்தின் செயற்பாட்டாளர் கௌதமன், கிளிவெட்டி மகா வித்தியாலய அதிபர் திரு. கோணேஸ்வரராஜா, திருகோணமலை சேனையூர் மகா வித்தியாலய அதிபர் திரு. கணேசலிங்கம், திருகோணமலை கிராமிய கல்வி நிறுவனத்தின் உபதலைவர் திரு.தயானந்தகுரு, செயலாளர் திரு து.விக்னேஷ், நிர்வாக சபை உறுப்பினர் திரு. ம.டலக்சன், கந்தளாய் பிரதேச இணைப்பாளர் திரு.நாதன்மற்றும் மட்டக்களப்பு இணைப்பாளர் திரு.சீலன் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து மாதாந்த ஊக்குவிபு கொடுப்பனவினை பெறுகின்ற மற்றும் பெறுவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட ஆசிரியர்களின் பங்குபற்றளுடன் மிகவும் பயன்னுள்ள வகையில் கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் ( 05) இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் முன்பள்ளிகளின் கடந்த கால செயற்பாடுகள், எதிர்கால திட்டங்கள் என்பனவும் கலந்துரையாடப்பட்டதுடன் சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த செயற்பாடாளர் சுப்பிரமணியம் ஸ்ரீதரன் சேவையினை பாராட்டி கௌரவிக்க படத்துடன் நினைவு சின்னமும் வழங்கப்பட்டது.

## தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் சுவாமி தேர் ஊர்வலம்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

தைப்பூச மகோற்சவத்தை முன்னிட்டு தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் சுவாமி தேவஸ்தானத்தில் (5) முத்தேர் பவனி இடம்பெற்றது. தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ மு.பிரசாந்த் வாமதேவ சிவாச்சாரியார், மகோற்சவ பிரதம குரு ஸ்ரீ வை.மு.ப.முத்துகுமார சுவாமி சிவாச்சாரியார் மற்றும் உற்சவகால குரு சிவஸ்ரீ ஜெயராமநிதர்சன குருக்கள் ஆகியோரின் தலைமையில் இந்த தைப்பூச மகோற்சவ வழிபாடுகள் இடம்பெற்றன.

## மகேஸ்வரலகரி நூல் வெளியீட்டு விழா

(தலவாக்கலை பி.கேதீஸ்)

அண்மையில் நயினாதீவு நாகபூஷனி அம்மன் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தாவும் மற்றும் இந்துமத குரு பீடாதிபதியுமான அமரர். சிவ ஸ்ரீ சம்புமகேஸ்வர சிவாச்சாரியாரின் சிரார்த்த தினத்தையொட்டி மகேஸ்வரலகரி நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

அதன் ஒரு பிரதியை யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருத துறை தலைவர் மகேஸ்வர பாலகைலாசநாத சர்மாவிடம் இருந்து முன்னாள் ஜனாதிபதியின் இந்து விவகார இணைப்பாளர் சிவ ஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்பா பெற்றுக்கொண்டார்.

# உள்ளூராட்சி மன்றத்தேர்தல் 2023

## மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) இலங்கை தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள்




































கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்கள்

# தவறுகளை தட்டிக்கேட்டால் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது

அரசாங்கம் இழைக்கும் தவறுகளை ஜனநாயக வழியில் தட்டிக்கேட்கும்போது, அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாகவும் இதனை நிறுத்தி மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்குமாறும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா, சாளம்பைக்குளத்தில் (05) இடம்பெற்ற மக்கள்சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,



'கடந்த ஆட்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்தின் நிலையை மாற்றியதனால் நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்று இன்று மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் எதிர்நோக்குகின்ற கஷ்டங்களை வெளிப்படுத்துவதற்காக வீதியிலிறங்கி, ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை முன்னெடுக்கின்றபோது, அவர்களை அடக்கி, ஒடுக்கி மிக மோசமான முறையில் தாக்குதல்கள் நடாத்தப்படுவதை இன்று காணக்கூடியதாக உள்ளது.

மக்களுடைய ஜனநாயகக் குரல் இவ்வாறு நசுக்கப்படுகின்றபோது, எதிர்காலத்தில் நாட்டிலே பாரிய ஆபத்துக்கள் ஏற்படலாம் என்ற ஐயம் நிலவுகின்றது.

எனவே, ஆட்சியாளர்கள் நாட்டு மக்களுடைய உண்மையான நிலையை உணர்ந்து, தற்பொழுது முன்னெடுத்துச் செல்கின்ற நடவடிக்கைகளை நிறுத்தி, மக்களுடைய நலனுக்கான திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் கூட மின்சாரம் துண்டிக்கப்படுவதனால் மாணவர்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இதே போன்று, இன்னும் எத்தனையோ விடயங்களில் அரசாங்கம் தவறிழைத்துக்கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் ஜனநாயக ரீதியில் தட்டிக்கேட்கும்போது, அவர்களுக்கு எதிராக மிக மோசமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். அவற்றை பார்க்கின்றபோது மிகவும் வேதனையாக இருக்கின்றது' என்றார்.




# திருக்கேதீச்சர ஆலயத்தில் சிவானந்த குருகுலம் சிவாகம வேதபாடசாலை திருமுறைப்பண்ணிசைக் கல்லூரி அங்குரார்ப்பணம்





(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தின் பாடல் தளமான திருக்கேதீச்சர ஆலயத்தில் சிவானந்த குருகுலம் சிவகாம வேத திருமுறைப்பண்ணிசைக் கல்லூரி நீண்டகாலத்துக்குப் பின் மீண்டும் அங்குராப்பணம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

1960 ஆம் ஆண்டுக்கு முன் இளம் ஐயர் குருக்களுக்கு குருகுலம் சிவகாம வேத பாடசாலை திருக்கேதீச்சர ஆலயத்தில் இடம்பெற்று வந்துள்ளது எனவும் பின் பிரச்சனை காரணமாக இவ் பாடசாலை திருக்கேதீ;ஸ்வர ஆலயத்தில் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இவ் இளம் குருக்கள் இந்தியாவுக்குச் சென்று தங்கள் குருகுலப் படிப்புக்களை மேற்கொண்டு வருகின்ற நிலையிலேயே இவ் திருமுறைப்பண்ணிசை கல்லூரி மீண்டும் திருக்கேதீச்வர ஆலயத்தில் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

தருமப்புர ஆதினத்தின் அனுசரனையுடன் ஞாயிற்றுக்கிழமை (05.02.2023) இவ் அங்குராப்பணம் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இவ் நிகழ்வில் 12 குருகுல மாணவர்களுடன் திருக்கேதீச்வர ஆலய செயலாளர் எந்திரி எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் மற்றும் இது தொடர்பானவர்களும் கலந்து கொண்டனர்.

இவ் கல்லூடயில் மேலும் மாணவர்கள் கலந்து கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதால் இவர்கள் தங்கியிருந்து கற்பதற்கான ஏற்பாடுகளையும் தாங்கள் மேற்கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுத்து வருவதாக திருக்கேதீச்வர ஆலய செயலாளர் எந்திரி எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

# கனடாவிலிருந்து காரைதீவு வைத்தியசாலைக்கு உதவி



(வேத சகா)

கனடா காரைதீவு மக்கள் ஒன்றியம் 5லட்சருபா பெறுமதியான மருந்து பொருட்கள் மற்றும் போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரத்தை வைத்திய கலாநிதி டாக்டர் அ.வரதராசா அவர்களின் ஒழுங்கமைப்பில் (6) திங்கட்கிழமை காரைதீவு பிரதேச வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ பொருட்களையும் 3 லட்ச ரூபாய் பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரமும் கையளிக்கப்பட்டன.

இவற்றை கையளிக்கும் வைபவம் இன்று காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் முன்னாள் உபசெயலாளர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது .

கனடாவில் வாழும் தமது பிள்ளைகளின் சார்பாக ஓய்வு நிலை அதிபர்களான வெ. ஜெயநாதன் பொன் சிவானந்தன் ஆகியோர் அப் பொருட்களை வைத்தியசாலை பொறுப்பு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரனிடம் வழங்கி வைத்தனர்.

இதற்கு இணைப்பாளராக செயற்பட்ட சமூக சேவையாளர் எம். புண்ணியநாதனும் கலந்து சிறப்பித்தார்.

# செங்கலடி பிரதேச செயலகத்தில் 75 வது சுதந்திர தின நிகழ்வு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 75வது சுதந்திர தின நிகழ்வானது பிரதேச செயலாளர் கே . தனபாலசுந்தரம் தலைமையில் செயலக வளாகத்தில் இடம் பெற்றது.

இதன் போது தேசியக் கொடி பிரதேச செயலாளரால் ஏற்றி வைக்கப்பட்டதை தொடர்ந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, மரியாதை செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் , உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். 75வது சுகந்திர தினத்தை முன்னிட்டு மர நடுகை நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# கல்பிட்டியில் சட்டவிரோதமான முறையில் கடல் அட்டைப் பிடித்த 03 பேர் கைது



(வாஸ் கூஞ்ஞ)

கல்பிட்டியில் சட்டவிரோதமான முறையில் கடல் கடல் அட்டைப் பிடித்த 03 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்

சனிக்கிழமை (04) கல்பிட்டி இப்பான் தீவுஇபகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக கடல் வெள்ளரி அட்டைப் பிடித்த 03 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

இந்த நடவடிக்கையின் மூலம் 1% சங்கு குண்டுகள்இ டைவிங் கியர் 01 மற்றும் சுமார் 6%1 கடல் வெள்ளரிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தீவுக்கடல் மற்றும் நாட்டின் கரையோரப் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடிப்பதைத் தடுக்க இலங்கை கடற்படை வழக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையிலேயே இவ் கைது இடம்பெற்றுள்ளது.

இந்த நடவடிக்கையானது எஸ்எல்என்எஸ் விஜயா மூலம் இப்பான்தீவிலிருந்து பெப்ரவரி 04 ஆம் திகதி காலை முன்னெடுக்கப்பட்டது.

இதன்படிஇ சட்டவிரோதமான முறையில் கடல் வெள்ளரி அறுவடை செய்த 03 பேரை கடற்படையினர் கைது செய்ததுடன்இ 17 சங்குகள்இ டைவிங் கருவிகள்இ 01 டிங்கி படகுகள் மற்றும் சுமார் 671 கடல் வெள்ளரிகள் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 26 முதல் 54 வயதுக்குட்பட்ட கல்பிட்டி பிரதேசத்தில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

03 சந்தேக நபர்களும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கல்பிட்டி மீன்பிடி பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.











# அம்பாறை மாவட்ட செயலக சுதந்திர தின விழா!

அம்பாறை மாவட்ட செயலகத்தின் இலங்கையின் 75 வது தேசிய சுதந்திர தின விழா மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஜே.எம்.டக்ளஸ் தலைமையில் மரியாதை அணிவகுப்பு மற்றும் பாரம்பரிய கலை அம்சங்களுடன் சிறப்பாக நடைபெற்ற போது...

படங்கள் வி.ரி. சகாதேவராஜா

# கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் 75 வது தேசிய சுதந்திர தின விழா!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு கோறளைபற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் %5 ஆவது சுதந்திர தினத்தை (4) முன்னிட்டு பிரதேச செயலாளர் எஸ். எச். எம். முசம்மில் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளரினால் தேசியக் கோடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தியாவட்டவான் கிராம சேவைப் பிரிவில் 49 சுய தொழில் முயற்சியாளர்களின் தொழில் மேம்பாட்டிற்கான ஊக்குவிப்பு நிதியாக தலா 20,000/= வீதம் 10 தவணைகளுக்கு கிராம சக்தி மக்கள் அமைப்பின் கீழ் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டது.

அத்துடன் தியாவட்டவான் கிராம சேவகர் கிராமிய புத்தெழுச்சி மையத்தின் ஏற்பாட்டில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. எம். ஏ. சி. ரமீஸா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச். எம். எம். ருவைத், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். எச். எம். அறபாத், சமூர்த்தி உத்தியோகத்தர் ஏ. முஹம்மத், நிருவாக உத்தியோகத்தர், கிராம சேவகர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உகந்தையில் தைப்பூசத் திருவிழா !





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை முருகன் ஆலயத்தில் (5) ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருவிழா சிறப்பாக இடம்பெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க. கு. சீதாராம் குருக்கள் தலைமையில் உதவிக்குருமார்களான சிவஸ்ரீ ஆ. கோபிநாத சர்மா மற்றும் சிவஸ்ரீ சி.கு. கோவர்த்தன சர்மா ஆகியோரின் ஒத்துழைப்போடு இடம்பெற்ற தைப்பூசத் திருவிழாவில் காலை 10 மணியளவில் உகந்தமலையில் இருக்கின்ற வள்ளியம்மன் ஆலயத்திலிருந்து பாற்குடபவனி இடம் பெற்றது.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை ஓய்வு நிலை அதிபர் வேலாப்போடி இலட்சுமிசுந்தரம் அவர்களின் உபயத்தில் தைப்பூச திருவிழா வழமை போல இம்முறையும் இடம் பெற்றது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க தெரிவித்தார் . பாற்குடபவனிக்கான பாலை இலவசமாக தம்பிலுவிலைச் சேர்ந்த ரமேஷ்குமார் ஜனாதினி தம்பதிகள் வழங்கினர்.

காலையில் பாற்கூடபவனியை தொடர்ந்து அபிஷேகம் மற்றும் அலங்கார பூஜை இடம்பெற்றது. மாலையில் திருவிளக்குப்பூஜை வசந்த மண்டப அலங்கார பூஜை சுவாமிகள் உள்வீதி உலா வருதல் என்பன இடம்பெற்றன.

பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் 75 வது தேசிய சுதந்திர தின விழா - 2023






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் %5வது தேசிய சுதந்திர தின(04) நிகழ்வுகள் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நான்கு கட்டங்களாக இடம்பெற்றன.

பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளரினால் தேசியக்கொடி ஏற்றப்பட்டதனை அடுத்து, அலுவலக உத்தியோகத்தர்களினால் தேசிய கீதம் இசைக்கப்பட்டு மும்மத அனுஷ்டானங்கள் இடம்பெற்றன.

தேச விடுதலைக்காக உயிர் நீத்தோருக்காக இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. தற்கால சூழலில் உணவுப் பாதுகாப்பு செயற்திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பாக பிரதேச செயலாளரினால் 75வது சுதந்திர தின விசேட உரை நிகழ்த்தப்பட்டது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் டெங்கு பரவலை தடுத்தல், சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பசுமை மேம்பாடு அடிப்படையில் அலுவலக வளாகத்தினுள் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய வளாகத்தில் %5 வகையான பழமரக் கன்றுகள் நடுகை செய்யப்பட்டதுடன், நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட்டு சுபீட்ஷமான வாழ்க்கைக்கான பூசை வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், களுதாவளை 4 சாந்திபுரம் கிராம சேவகர் பிரிவில் இடர்களை எதிகொள்ளும் %5 குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் வாழ்வாதார உதவிகளும், கடன் திட்டங்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வுகளில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், ஆலய நிருவாகத்தினர், மாதர் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள், சமூக அமைப்புக்களின் உறுப்பினர்கள், பிரதேசவாசிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தென்னை மரத்திலிருந்து தவறி விழுந்து 3 பிள்ளைகளின் தந்தை பலி!



(எச்.எம்.எம்.பர்ஸான்)

தென்னை மரத்திலிருந்து விழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி பகுதியில் வைத்தே இந்த சம்பவம் திங்கட்கிழமை (6) இடம்பெற்றுள்ளது.

தனது வீட்டு முற்றத்தில் நின்ற சுமார் 50 அடி உயரமான தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களை பறிக்கும் போது கால் வழுக்கி நிலத்தில் விழுந்து உயிரிழந்துள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. இவ்வாறு மரணமடைந்த நபர் சித்தாண்டி -02, பிரதான வீதியைச் சேர்ந்த 47 வயதுடைய சிவகுரு குமாரசாமி எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

சம்பவம் நடந்த இடத்துக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ். எம். நஸீருடன் சென்ற சந்திவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

உயிரிழந்தவரின் சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, பிரேத பரிசோதனை முடிவுற்றதும் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு மரண விசாரணை அதிகாரி பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தமிழரசின் ஆலையடிவேம்பு பிரதேச சபை வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு


























(சுமன்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேசசபையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு இன்றைய தினம் முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தலைமையில் ஆலைய டிவேம்பு கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிரா ஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் களான எம்.ஏ.சுமந்திரன், த.கலையரசன், இரா.சாணக்கியன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொருளாளர் கனகசபா பதி, வலிபர் முன்னணி துணைச்செயலாளர் நிதான்சன், ஆலை யடிவேம்பு பிரதேசசபை வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிடுவதற் காக நியமிக்கப்பட்ட வட்டார, பட்டியல் வேட்பாளர்கள் அறிமுகம் செய்யப்பட்டு, அதிதிகளால் கௌரவிக்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.